1990 சனவரி, 27]

சிதம்பரம் நகர மருத்துவமனையில் ஆர்.எம்.ஓ. குவார்ட்டர்ஸ் கட்டுதல்.

**3103* டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் நகரிலுள்ள மருத்துவமனையில் ஆர்.எம்.ஓ. தங்குவதற்கு மருத்துவமனை வளாகத்திற்குள் குவார்ட்டர்ஸ் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாலுக்கா தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனைகளில் எல்லாம் இப்போது விரிவாக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. உதாரணமாக 15 வருஷங்களுக்கு முன்பு 2, 3 டாக்டர்களே இருந்த இடங்களில் எல்லாம் இப்போது 13 அல்லது 15 பேர்கள் இருக்கிறார்கள். அதற்குரிய விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும் அந்த மருத்துவமனைகளினுடைய வளாகத்தை சுகாதார முறையிலே பராமரிப்பதற்கு, தண்ணீர் சப்ளை போன்ற பணி களைக் கவனிப்பதற்கு யாரையும் பொறுப்பாக நியமிக்காததன் காரணமாக, சுகாதாரமற்று இருக்கிறது. மருத்துவமனை அதிகாரிகள் காலையிலே வந்து ஒரு மணிக்கெல்லாம் போய்விடு கிறார்கள். டியூட்டியிலே உள்ளவர்கள்கூட மாலையில் இருப்பது சிரமமாக இருக்கிறது. இந்த நிலையிலே கவனிப்பாரற்று மிகவும் மோசமான நிலையிலே ஒவ்வொரு மருத்துவமனையும் பஸ் ஸ்டேண்ட் போலவும் ரயில்வே ஸ்டேஷன் போலவும் காட்சியளிக்கிறது. அவைகளை சீர்படுத்தி ஒவ்வொரு தாலுக்கா மருத்துவ நிலையங்களிலும் ஆர். எம். ஓ. என்கிற ரெசிடெண்ட மெடிகல் ஆபிசர்களைப் போட்டு அவர்களுடைய பொறுப்பிலே அந்த வளர்கத்தினுடைய சுகாதாரம் மற்ற வசதிகளைக் கவனிக்கச் செய்து நடத்துவதற்கு அரசு ஆராய்ந்து செயல் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இப்போது எந்த வட்டார மருத்துவ மனையிலும் ஆர்.எம்.ஓ., குடியிருப்புகள் கட்டப்படவில்லை. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற குடியிருப்புகளிலேகூட பெரும்பாலான மருத்துவர்கள் தங்குவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் மருத்துவராக இருக்கிற காரணத்தால் அவர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டப்பட்டிருக்கிற குடியிருப்புகளில், முதலிலே அங்கேயிருக்கிற மருத்துவர்கள் அங்கேயே தங்கவேண்டுமென்று இந்த அரசு நிர்ணயித்து இருக்கிறது. அதற்குப் பிறகு படிப்படியாக வட்டார மருத்துவமனையிலேயும் ஆர்.எம்.ஓ. குடியிருப்புகளைக் கட்டுவதற்கு நிதி நிலைமையைப் பொறுத்து இந்தஅரசு ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், ஆரம்ப சுகாதார நிலையம் என்பதும் தாலுக்கா மருத்துவமனை என்பதும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது. தாலுக்கா மருத்துவமனையில் நோயாளிகளுக்கு Curative aspects என்ற வகையிலே, நோயாளிகளுக்கு நோய் குணமாக்குகின்ற நோக்கத்தின் அடிப்படையில் பணி செய்யப்படுகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்களிலே mostly preventive aspects, அதாவது நோய்களைத் தடுக்கின்ற முறையிலே என்னென்ன பணிகள் அடிப்படையாகச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் பிரைமரி ஹெல்த் சென்டர் என்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களிலே மருத்துவர்கள் இரவில் தங்குவதில்லை. அது வெகுவாக பாதிக்கப்படுவதில்லை. ஆனால் தாலுக்கா தலைநகர் மருத்துவ மனைகளிலே 100, 200, 300 நோயாளிகள் என்ற அளவிலே இருக்கின்ற இடங்களில் அது கவனிப்பாரற்று இருப்பதினால் பஸ் ஸ்டாண்டு போலவும், இரயில்வே நிலையமாகவும் காட்சியளிப்பதினாலே 24 மணி நேரமும் அங்கே ஒருவரோ அல்லது இருவரோ அல்லது ரொட்டேஷனிலோ ஒருவர் பொறுப்பாக இருந்து கவனிப்பதற்கு அரசு ஆராய்ந்து செயல்படுமா என அறிய விரும்புகிறேன்.

10-40 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : துணைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதினுடைய நோக்கமே அங்கே மருத்துவர்கள் தங்க வேண்டும் என்பதுதான். அது ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்தாலும், தாலுக்கா மருத்துவமனையாக இருந்தாலும்

கட்டிக் கொடுக்கின்ற குடியிருப்புகளில் தங்கினால்தான் அங்கே இருக்கின்ற மக்களுக்கு வைத்திய வசதி கிடைக்கும். அதைத் தான் நான் சுட்டிக் காட்டினேனே தவிர இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் தெரியும். அரசினுடைய நிதிநிலையைக் குறித்து இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை முன்பே தெரிவித்திருக்கிறேன்.

மகளிருக்கான தொழிற்பயிற்சிக்கூட கட்டடம்.

குறுகிய கால வினா எண். *7970 திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சைதை தொகுதியில் மகளிருக்கான தொழிற் பயிற்சிக்கூட கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே,

(அ) கிண்டியில் இயங்கி வரும் மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக்கட்டடம் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கட்டட வேலை விரைவில் தொடங்கவிருக்கிறது

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் மகளிருக்கான தொழிற்பயிற்சிக்கூடம் ஒன்றே ஒன்று தான் உள்ளது. ஆனால் ஆண்டு தோறும் அதிகமான அளவு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆனால் மிகக் குறைந்த அளவு எண்ணிக்கைதான் இடம் அளிக்கப்படுகிறது. எனவே இந்த ஆண்டு கூடுதலான இடம் அளிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.